# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 26.06.2019 | | **2019ம் ஆண்டு ஜூன் மாதம் 26–ம் தேதி புதன் கிழமை மாலை 05.00 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 26.06.2019 | 338 | <u>பொருள் எண். 1</u><br>துவாக்குடி நகராட்சியின் ஆணையர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகப்பணி காரணமாக வெளியூர் பயணம் மேற்கொள்ளுவதற்கு பயணப்படி வழங்க வேண்டும், எனவே 2019–20 ம் நிதியாண்டிற்கு பயணப்படி வழங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 1,30,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண். 725/2019/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 26.06.2019 | 339 | <u>பொருள் எண். 2</u><br>தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூரில் இருந்து 2017–18 மற்றும் 2018–19 ம் ஆண்டுகளுக்கு துவாக்குடி நகராட்சியின் பங்கீட்டு தொகை ரூ. 20000/– செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ. 20000/– மட்டும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண். 386/2019/சி1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 26.06.2019 | 340 | <u>பொருள் எண். 3</u><br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி எண். TN 45 AY 0474 –ன் தகுதி சான்று வரும் 19.07.2019–ல் முடிவடைவதால், வண்டியின் பழுதுகள் சரி செய்தல், வர்ணம் பூசுதல் மற்றும் எலக்ட்ரிக் வேலைகள் செய்யவும் தகுதிச் சான்றினை புதுப்பிப்பதற்கும் உண்டான உத்தேச செலவினம் ரூ. 1,80,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண். 414/2019/எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 26.06.2019 | 341 | <u>**பொருள் எண். 4**</u><br>துவாக்குடி நகராட்சியில் பராமரிக்கப்படும் 17 கழிப்பிடங்கள் மற்றும் அலுவலக கழிப்பிடம் ஆகியவற்றின் கழிவு நீர் தொட்டிகளை தனியார் நிறுவன கழிவு நீர் அகற்றும் வாகனம் மூலம் அப்புறப்படுத்துவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 2,10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 512/2019/எச்1** | |
| 26.06.2019 | 342 | <u>**பொருள் எண். 5**</u><br>துவாக்குடி நகராட்சிக்கு 2019–20 ம் நிதியாண்டிற்கு தேவையான பொது சுகாதாரப்பிரிவு தளவாட சாமான்கள் மற்றும் இதர சாமான்கள் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 1,40,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** அத்தியாவசிய தேவை என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1022/2018/எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 26.06.2019 | 343 | <u>**பொருள் எண். 6**</u><br>துவாக்குடி நகராட்சிக்கு 2019–20 ம் நிதியாண்டிற்குஅலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், பாரங்கள் மற்றும் பதிவேடுகள் வாங்கி கொள்வதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 559/2019/எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 26.06.2019 | 344 | <u>**பொருள் எண். 7**</u><br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மற்றும் இதர பயன்பாட்டிற்கு 2019–20 ம் நிதியாண்டிற்கு கிருமி நாசினி பொருட்கள் மற்றும் மழை காலங்கள், பருவநிலை மாறும் காலங்களில் பரவும் நோய் தடுப்பு மருந்துகள் வாங்கி கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ. 1,35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 489/2019/எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>26.06.2019</td>
<td>345</td>
<td><u>பொருள் எண். 8</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள், கொசு மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டருக்கு தேவையான பெட்ரோல், டீசல் மற்றும் ஆயிள் ஆகியவற்றை 2019–20 ம் நிதியாண்டிற்கு வாங்கி கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ. 7,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 489/2019/எச்1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>26.06.2019</td>
<td>346</td>
<td><u>பொருள் எண். 9</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களை 2019–20 ம் நிதியாண்டிற்கு இயக்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி ஊதிய விகித அடிப்படையில் ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 8,40,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 489/2019/எச்1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>26.06.2019</td>
<td>347</td>
<td><u>பொருள் எண். 10</u><br>துவாக்குடி நகராட்சியின் பொது நிதி (குடிநீர் நிதி) 2019–20 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 14.06.2019 –ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>1 முதல் 6–வது வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், சிறு மின்விசை பம்புகள் மற்றும் அடிப்பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td><td>6.00</td><td>எஸ்.ஏ. அரசு<br><br>ஆர். சிவக்குமார்</td><td>மதிப்பீட்டை விட 0.03 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.69 % அதிகம்</td></tr>
</table></td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr>
<td>2.</td>
<td>7 முதல் 15–வது வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், சிறு மின்விசை பம்புகள் மற்றும் அடிப்பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td>
<td>6.00</td>
<td>எம். ஜீவானந்தம்<br><br>ஆர். சிவக்குமார்</td>
<td>மதிப்பீட்டை விட 0.09 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.73 % அதிகம்</td>
</tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.<br>
ந.க.எண். 475 /2019/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>26.06.2019</td>
<td>348</td>
<td>
<u>பொருள் எண். 11</u><br>
துவாக்குடி நகராட்சியின் துவாக்குடி, பெல்நகர், முத்துராமலிங்க தேவர்சாலை மற்றும் பெரியார் திடல் ஆகிய பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குளோரினேஷன் செய்வதற்கு 2019–20 ம் நிதியாண்டிற்கு தேவையான லிக்யூடு குளோரின் சப்ளை செய்தல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு செய்து தருவதற்குண்டான செலவினத்திற்கு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், மேலும் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி நகராட்சியின் பெல்நகர் மற்றும் முத்துராமலிங்கதேவர் சாலை பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு 2019–20 ம் நிதியாண்டிற்கு லிக்யூடு குளோரின் சப்ளை செய்தல் மற்றும் குளோரின் மோட்டார் மற்றும் இதர வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல்</td><td>9.80</td></tr>
<tr><td>2.</td><td>துவாக்குடிமலை பெரியார் திடல் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 2019–20 ம் நிதியாண்டிற்கு லிக்யூடு குளோரின் சப்ளை செய்தல் மற்றும் குளோரின் மோட்டார் மற்றும் இதர வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல்</td><td>5.40</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 495/2019/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 26.06.2019 | 349 | <u>பொருள் எண். 12</u><br><br>துவாக்குடி நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்படும் பொது கழிப்பிடங்கள், அலுவலக கழிப்பிடம் மற்றும் இதர நகராட்சி கட்டிடங்களில் உள்ள கழிப்பிட கழிவு நீர்த்தொட்டிகளில் நிரம்பியுள்ள கழிவுநீரினை அகற்றுவதற்கு கீழ்கண்ட விவரப்படியான மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. தாமரை செப்டிக்டேங்க் கீளினிங் ( ஒரு நடைக்கு ) – ரூ. 3500/–<br>2. பாபு குட்டி செப்டிக்டேங்க் கீளினிங் ( ஒரு நடைக்கு ) – ரூ. 3800/–<br>3. ராஜு செப்டிக்டேங்க் கீளினிங் ( ஒரு நடைக்கு ) – ரூ. 3600/–<br>மேற்கண்டபடி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தாமரை செப்டிக்டேங்க் கீளினிங் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ளவும் அதற்குரிய பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1855/2018/எச்1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 26.06.2019 | 350 | <u>பொருள் எண். 13</u><br><br>துவாக்குடி நகராட்சி அலுவலகத்தின் ஆணையர் அறை மற்றும் நகர்மன்ற தலைவர் அறைகளில் இயங்கி வரும் குளிர்சாதன பெட்டிகள் பழுதடைந்துள்ளதால் அவற்றின் பழுதுகளை நீக்கி சர்வீஸ் செய்வதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 2000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அங்கீகரிக்க நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 495/2019/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>26.06.2019</td><td>351</td><td><u>பொருள் எண். 14</u><br><br>துவாக்குடி நகராட்சியில் 2018–19 –ம் ஆண்டிற்கு நான்கு காலாண்டுகளுக்கு ஒப்பந்ததாரர்களின் வேலையில் பிடித்தம் செய்யப்பட்டு கட்டப்பட்ட வருமானவரி விவரத்தினை வருமான வரி அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்பந்ததாரர்களுக்கு நான்கு காலாண்டுகளுக்குரிய TDS Certificate (16 A) பெற்று தருவதற்கு கட்டணமாக ரூ. 10,450/– மற்றும் GST Certificate ( 7 and 7A & 3B) பெற்று தருவதற்கு கட்டணமாக ரூ. 11,500/– ஆக மொத்தம் ரூ. 21950/– ALAYAM ASSOCIATES நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ஆணையரின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 841/2019/இ1</td><td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>26.06.2019</td><td>352</td><td><u>பொருள் எண். 15</u><br>துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2019–20 –ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 13.06.2019–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி பேரூந்து நிறுத்த நிழற்குடையில் இரும்பிலான 7 இருக்கைகள் அமைத்தல்</td><td>2.80</td><td>M/s. அப்துல்லா இண்டஸ்ரீஸ்<br><br>M/s. பெஸ்ட் எண்டர்பிரைசஸ்</td><td>ரூ. 34950/–<br><br>ரூ. 35284/–</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. அப்துல்லா இண்டஸ்ரீஸ் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.<br>ந.க.எண். 504/2019/இ1</td><td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 26.06.2019 | 353 | <u>**பொருள் எண். 16**</u><br>துவாக்குடி நகராட்சி அலுவலக வளாக பகுதியில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேலும் நகராட்சி வரும் பொதுமக்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு கூடாரம் கட்டுவதற்குண்டான செலவினம் ரூ. 9.90 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** நகராட்சியின் பொதுநிதியில் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 504/2019/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

______________ X ______________